# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்.

**முன்னிலை:** திரு. S. விஜய் ஆனந்த், B.E, B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.

2023– ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு 2054, ஸ்ரீசோபகிருது வருடம் ஆவணி மாதம் 19 ஆம் நாள்)

**இடைக்கால மனு எண். 373/2022**
**in**
**அசல் வழக்கு எண். 60/2022**

**CNR.No. TNTV04–000124–2022**

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தாலுக்கா & முன்சிபி, தண்டலை, தியானபுரம், கூட்டுறவு நகர், 2/400 ஜி ஆவணி வீதி என்ற முகவரியில் வசித்துவரும் வெங்கடாசலம் குமாரர், 64 வயதுள்ள, V. ராமச்சந்திரன்.

..... மனுதாரர்/வாதி

/எதிர்/

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் தாலுக்கா & முன்சிபி, கோமல் அஞ்சல், திருக்காரவாசல், கோமல், மேலத்தெரு என்ற முகவரியில் வசித்து வரும் வெங்கடாசலம் குமாரர், இந்து, 57 வயதுள்ள, V. ராமன்.

..... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

மனுதாரரின் அமைதியான அனுபோகத்திற்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதியோ அவரது ஆட்களோ, முகவர்களோ, ஏஜெண்டுகளோ எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்றும், அத்துமீறி பிரவேசித்து தாவா சொத்துக்களில் உழவு பணியை தடை செய்யக்கூடாது என அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால தற்காலிக உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்க உத்தரவிட வேண்டி கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கலான நாள் 10.10.2022.

மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் 10.10.2022.

இம்மனுவிற்கு நீதிமன்ற கட்டணமாக ரூ.20/– செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு கடந்த 20.07.2023–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. R. அய்யப்பன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. முருகேசன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற நிலுவையில் இருந்து வந்த இம்மனு மீது இன்று (05.09.2023) இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்பாணைக் கட்டளை</u>

1. இம்மனு தள்ளுபடி செய்து தீர்ப்பாணைக் கட்டளைப் பிறப்பிக்கப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

<u>சொத்து விபரம்</u>

<u>தாவா 1 வது அயிட்ட சொத்து</u> :–

நாகப்பட்டிணம் ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிக், திருவாரூர் சப்ரிஜிஸ்டரைச் சேர்ந்த திருவாரூர் தாலுக்கா 115 திருக்காரவாசல் வட்டம், கோமல் கிராமத்தில் திருவாரூர் யூனியன் திருக்காரவாசல் பஞ்சாயத்துக்குட்பட்டது.

R.S.No. 165–5 நூற்றி அறுபத்து ஐந்தில் ஐந்து நஞ்சை புகல் விஸ்வநாத ஸ்வாமி நஞ்சைக்கு கிழக்கு, தனம் நஞ்சைக்கு மேற்கு, ஜெயராமன் நஞ்சைக்கு தெற்கு, சீனிவாச கனபாடிகள் நஞ்சைக்கும் கோவிந்தசாமி நஞ்சைக்கும் வடக்கு இதற்குட்பட்டது கீழ்புறம் செண்டு 0.67.

<u>தாவா 2 வது அயிட்ட சொத்து</u> :–

நாகப்பட்டிணம் மாவட்டப் பதிவகம், திருவாரூர் சார்பதிவகத்தைச் சேர்ந்த திருவாரூர் தாலுக்கா, 115 நீர் திருக்காரவாசல் வட்டம், கோமல் கிராமத்தில்

1) R.S.No. 165–5 நஞ்சை புகல் ஏ 0.37 செண்டு

(ஆர் எஸ் நம்பர் நூற்றி அறுபத்து ஐந்தில் ஐந்து நஞ்சை புகல் முப்பத்து ஏழு செண்ட்)

நான்கெல்லை.

தமிழ்செல்வி நஞ்சைக்கு – கிழக்கு

ஜெயராமன் & நடேச செட்டியார் இவர்களது நஞ்சைக்கு – தெற்கு

சீனிவாசய்யர் நஞ்சைக்கு – வடக்கு

ஆறுமுகம் பிள்ளை நஞ்சைக்கு – மேற்கு

இதற்குட்பட்டது.

2) R.S.No. 165–6 நஞ்சை புகல் ஏ 0.27 செண்டு

(ஆர் எஸ் நம்பர் நூற்றி அறுபத்து ஐந்தில் ஆறு நஞ்சை புகல் இருபத்து ஏழு செண்ட்)

UDR படி 165–5 ல் இணைக்கப்பட்டுள்ளது.

ஆக மேற்கண்ட இரண்டு இனங்களும் கூடுதல் ஏ 0.64 செண்டு மட்டும்

இந்த அறுபத்தி நான்கு செண்ட் நஞ்சை நிலம் மட்டும்.

2023–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

(ஒம்/– S. விஜய் ஆனந்த்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.